சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.4/2022

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 09 ம் நாள் பி.வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமசாமி | வயது | 75 |
| த/பெ | காளப்ப கவுடர் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | சிக்காரம்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | விவசாயம் |

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

எனது தாத்தா 1956 ஆம் ஆண்டில் என்று காட்ட இது வரை எந்த ஆவணம் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி அல்ல. திருமப்ப கவுடர் எந்த வருடம் இறந்தார் என்றால் 1954 ஆம் ஆண்டில் இறந்தார். தேதி, மாதம் தெரியாது. திருமப்ப கவுடர் 1960 ம் ஆண்டில் தான் இறந்தார் என்றும் அவர் 1954 ம் ஆண்டில் இறந்து விட்டதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரி அல்ல. தாவா சொத்தை பொறுத்து ஏற்கனவே 3 ம் பிரதிவாதி நாகராஜ் 2 வழக்குகள் தாக்கல் செய்து உள்ளார் என்றால் சரி தான். அதில் ஒரு வழக்கானது 1ம் பிரதிவாதி கந்தசாமி கோரிய மின் இணைப்பை வழங்க கூடாது என மேட்டுப்பாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரி தான். மற்றொரு வழக்கு கோயமுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் 1442/2000 என்று தாக்கல் செய்யப்பட்டு பின்னர் மேட்டுப்பாளையம் மாவட்ட உரிமையியல் நீதி மன்றத்திற்கு

மாற்றப்பட்டு அ.வ.எண்.13/2005 என நடந்து வந்தது என்றால் சரி தான். முதல் வழக்கில் எனது சகோதரர் கந்தசாமி எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றும் 2 வது வழக்கில் நானும், சகோதரரும் எனது அப்பாவும் எதிர் வழக்குரை தாக்கல் செய்து உள்ளோம் என்றால் சரி தான். அ.வ.எண்.143/2000 என்ற முதலாவது தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இந்த வழக்கின் 3 ம் பிரதிவாதி நாகராஜ் ஒரு இடைக்கால உறுத்து கட்டளை கோரி மனு தாக்கல் செய்து இருந்தார் என்றும் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரி தான். அந்த உத்தரவின் நகலை நானும் பி.வா.சா.ஆ.27 ஆக குறியீடு செய்து உள்ளேன் என்றால் சரி தான். மேற்படி உத்தரவு கந்தசாமி தாக்கல் செய்யப்பட்டு இருந்த எதிர் உரையில் கூறப்பட்டு இருந்த காரணங்களை பாகப் பிரிவினையை பொறுத்து ஏற்றுக் கொள்ளாமல் விவசாய பயன்பாட்டிற்காக பணம் கட்டி இருந்ததால் அந்த திட்டம் வாபஸ் பெற்று விட்டால் மின் இணைப்பு பெற முடியாது என்பதால் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டு என்றால் சரி தான். அந்த வழக்கின் எதிர் வழக்குரையிலும் அ.வ.எண்.13/2005 வழக்கில் நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையிலும் காலப்ப கவுடர் திருமப்ப கவுடருக்கு எந்த வகையில் வாரிசு என குறிப்பிட்டு உள்ளோம் என்றால் சரி தான். அந்த எதிர் வழக்குரைகளையும் பி.வா.சா.ஆ.42 ஆக குறியீடு செய்து உள்ளேன் என்றால் சரி தான். அந்த இரண்டு எதிர் வழக்குரைகளிலும் காளப்ப கவுடர் என்பவர் திருமப்ப கவுடரின் ஒரே முதல் நிலை மற்றும் ஆண் வாரிசு என்ற முறையில் திருமப்ப கவுடர் மற்றும் கெம்பக்காள் ஆகியோர்களின் சொத்துக்களை அடைந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி தான். திருமப்ப கவுடருக்கு ரங்கம்மாள், காளம்மாள், சுப்பம்மாள் ஆகியோர்களும் திருமப்ப கவுடரின்

நேரடி முதல் நிலை வாரிசுகள் என்றால் இல்லை. அந்த மூவரும் திருமப்ப கவுடருக்கும், கெம்பக்காளுக்கும் பிறந்த பெண் குழந்தைகள் என்றால் சரி தான். அதனால் அவர்களும் கெம்பக்காள் மற்றும் திருமப்ப கவுடரின்முதல் நிலை நேரடி வாரிசுகள் என்றால் சரி தான். ஆனால் அவர்களுக்கு பிளிச்சி கிராமத்தில் உள்ள சொத்துகளை கொடுத்து விட்டார்கள். திருமப்ப கவுடர் மற்றும் கெம்பக்காளின் சொத்துகளில் காளப்ப கவுடருக்கு என்ன உரிமை உள்ளதோ அதே உரிமை தான் காளப்ப கவுடரின் சகோதரிகள் ஆன ரங்கம்மாள், காளம்மாள், சுப்பம்மாள் ஆகிய மூவருக்கும் உள்ளது என்றால் அவர்களுக்கு திருமப்ப கவுடர் உயிருடன் இருந்த காலத்திலேயே பிளிச்சி கிராமத்தில் உள்ள சொத்துக்களை பிரித்து கொடுத்து விட்டார். தாவா சொத்தில் அவர்களுக்கும் சம உரிமை இருப்பது தெரிந்தும் தான் பிளிச்சி கிராமத்தில் உள்ள சொத்துகளை பிரித்து கொடுத்தோம் என்றால் சரி அல்ல. பிளிச்சி கிராமத்தில் உள்ள சொத்துக்கள் கெம்பக்காளுக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்பதால் அதனை அவர் தனது பெண் மக்களுக்கு கொடுத்து விட்டார் என்றும் தாவா சொத்து கெம்பக்காள் மற்றும் திருமப்ப கவுடர் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதால் தாவா சொத்தில் அவர்களுக்கும் உரிமை உள்ளது என்றால் சரி அல்ல. திருமப்ப கவுடர் 1954 ஆண்டிலேயே இறந்த விட்டதால் அப்போது நடைமுறையில் இருந்த சட்ட படி காளப்ப கவுடர் மட்டுமே வாரிசு என்று இந்த வழக்கில் குறிப்பிட்ட சங்கதிகளை அ.வ.எண்.143/2000 மற்றும் 13/2005 வழக்கின் எதிர் வழக்குரைகளில் குறிப்பிட வில்லை என்றால் சரி அல்ல. திருமப்ப கவுடருக்கு 3 பெண் வாரிசுகள் இருப்பதை மறைத்து தான் எதிர் வழக்குரை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி அல்ல. உண்மையிலேயே

திருமப்ப கவுடர் 1954ம் ஆண்டில் இறந்து இருந்தால் அதனை அந்த எதிர் வழக்குரைகளில் குறிப்பிட்டு இருப்பேன் என்றால் சரி அல்ல. அந்த 2 வழக்குகளிலும் பெண் வாரிசுகளை மறைத்து விட்டு இந்த வழக்கில் எனது தகப்பனார் மட்டுமே ஒரே ஆண் வாரிசு என்ற முறையில் உரிமை உள்ளதாக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி அல்ல. அ.வ.எண்.13/2005 என்ற வழக்கு அனுமதிக்கப்பட்டது என்றால் சரி தான். அ.வ.எண்.13/2005 என்ற வழக்கில் காளப்ப கவுடர் மட்டுமே ஒரே ஆண் வாரி என குறிப்பிட்டு பெண் வாரிசுகளை மறைத்து விட்டதால் அந்த வழக்கு தீர்ப்பு அளிக்கப்பட்டது என்றால் சரி அல்ல. அ.வ.எண்.13/2005 என்ற வழக்கில் தீர்ப்பு பிறப்பிக்கப்படும் வரை திருமப்ப கவுடருக்கு 3 பெண் பிள்ளைகள் இருக்கும் விவரம் தெரியாது என்றால் சரி அல்ல. அந்த வழக்கில் நாகராஜ் திருமப்ப கவுடர் மற்றும் கெம்பக்காள் பெயரில் பெயரில் இருந்த சொத்துகளையும் காளப்ப கவுடர் பெயரில் இருந்த சொத்துக்களையும் காட்டி இருந்தார் என்றால் சரி தான். அந்த வழக்கில் நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் எனது அப்பா எனக்கும் எனது மற்ற சகோதர்களான கந்தசாமி, மற்றும் நாகராஜ் ஆகியோர்களுக்கு வாய்மொழியாக பிரித்து கொடுத்து விட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரி தான். இந்த வழக்கில் நான் தாக்கல் செய்து உள்ள எதிர் வழக்குரையிலும் எந்தெந்த சொத்துக்கள் வாய் மொழியாக பிரிக்கப்பட்டுள்ளது என்று ஏற்கனவே அ.வ.எண்.13/2005 வழக்கில் சொன்ன சங்கதிகளை சொல்லி யார் யாருக்கு எவ்வளவு சொத்துகள் பிரிக்கப்பட்டது என்று காட்ட ஒரு பட்டியலையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி தான். என்னுடைய முதல் விசாரணை ஆணை உரையிலும் 1977 வருடத்திய வாய் மொழி பாகத்தின்

அடிப்படையில் தான் அனுபவத்தில் இருப்பதாக கூறியுள்ளேன் என்றால் சரி தான். இந்த வழக்கில் எனது தரப்பு எதிர் வழக்குரை தாக்கல் செய்வதற்கு முன்னரே அ.வ.எண்.13/2005 ன் வழக்கின் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டு விட்டது என்றால் சரி தான். அ.வ.எண்.13/2005 என்ற வழக்கில் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்ட பின்னர் நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையிலும் நிரூபண வாக்கு மூலத்திலும் 1977 ம் வருடத்திய வாய்மொழி பாகத்தின் அடிப்படையில் யார் யாருக்கு பிரித்து கொடுக்கப்பட்டது என கூறியுள்ளேன் என்றால் சரி தான். அ.வ.எண்.13/2005 வழக்கின் தீர்ப்புக்கு எதிராக மேல் முறையீடு எதுவும் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் இல்லை. அ.வ.எண்.13/2005 வழக்கின் தீர்ப்புரையில் கெம்பக்காள் மற்றும் திருமப்ப கவுடரின் சொத்துகளை பொறுத்து எங்களுக்குள் வாய் மொழி பாகம் ஏற்பட்டது நிரூபணம் செய்யப்பட்டவில்லை என்று கூறப்பட்டது என்றால் சரி தான். அந்த தீர்ப்பு எதிராக நான் மேல் முறையீடு எதுவும் தாக்கல் செய்யாத நிலையில்1977 ம் ஆண்டு நடந்ததாக சொல்லும் வாய்மொழி பாகத்தின் அடிப்படையில் உரிமை எதுவும் கோர முடியாது என்றால் சரி அல்ல. வாய் மொழி பாகத்தின் அடிப்படையில் சுவாதீனத்தில் இருந்து அனுபவத்து வருவதாக கூறுவது தவறு என்றால் சரி அல்ல. அந்த சொத்துக்கள் தற்போது வரை கெம்பக்காள் மற்றும் திரும்ப கவுடருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்ற நிலையில் தான் இருந்து வருகிறது என்றால் சரி அல்ல. திருமப்ப கவுடர் மற்றும் கெம்பக்காளின் நேரடி வாரிசுகள் என்ற முறையில் வாதி மற்றும் 4 பிரதிவாதிக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளது என்றால் சரி அல்ல. அ.வ.எண்.13/2005 வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை பி.வா.சா.ஆ.46 மற்றும் 47 ஆக தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி தான். அந்த

வழக்கின் தீர்ப்புரையில் திருமப்ப கவுடரின் நேரடி வாரிசு என்ற முறையில் காளப்ப கவுடருக்கு இறங்குரிமை உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி அல்ல. திருமப்ப கவுடர் மற்றும் கெம்பாக்களுக்கு ரங்கம்மாள், காளம்மாள், சுப்பம்மாள் ஆகிய பெண் வாரிசுகளை அந்த வழக்கில் காட்டாமல் மறைத்து விட்டதால் தான் அவ்வாறு தீர்ப்பளிப்பட்டது என்றால் சரி அல்ல. பிளிச்சி கிராமத்தில் உள்ள சொத்துக்களை கெம்பக்காளின் பெண் வாரிசுகளுக்கு கொடுத்து விட்டதாக அ.வ.எண்.143/2000 மற்றும் 13/2005 ஆகிய வழக்கில் மறைத்து விட்டோம் என்றால் சரி அல்ல. இந்த சொத்துகளை அபகரிக்க வேண்டும் என்பதற்காகத்தான் அவ்வாறு குறிப்பிடவில்லை என்றால் சரி அல்ல. என்னுடைய எதிர் வழக்குரையிலும் நிரூபண வாக்கு மூலத்திலும் புல எண்.85/1டி பொறுத்து என் சகோதரர் மகன் சந்திசேகர் என்பவரும் அவளது மகள் சர்மிளா என்பவரும் விடுதலை பத்திரம் எழுதி கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரி தான்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

| |
|---|
| மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது. |

ஓம்/-கா.கெங்காராஜ்,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.